AL12-2-3

# பரலோகம்: எப்படி இருக்கும்? – பரலோகத்தின் எதிர்கால மகிமை

– நிகழ்ச்சி 3

இன்றைக்கு ஜான் அன்கர்பர்க் நிகழ்ச்சியில், கால்அப் போலின் கண்கெடுப்பின்படி, 77 சதவிகிதத்தினர் தாங்கள் மரித்தபின் பரலோகம் செல்வோம் என நம்புகிறார்கள், 6 சதவிகிதத்தினர் மட்டுமே நரகத்திற்கு செல்வதாக நினைக்கிறார்கள்.

ஆனால் யார் பரலோகத்திற்கு செல்வார்கள் என்பதைக் குறித்து இயேசு கிறிஸ்து சொல்லும்போது, அவர் அங்கு,‘‘ஜீவனுக்கு போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது அதை கண்டுபிடிக்கிறவர்கள் சிலர். கேட்டுக்குப்போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது அதன் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர் என்றார்.’’

கேட்டுக்குப்போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது அதன் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்.’’

பரலோகத்தில் செல்லும் சிலர் என்று இயேசு குறிப்பிடும் கூட்டத்தில் நீங்களும் ஒருவரா? நீங்கள் நிச்சயம் பரலோகம் போகாத நிலையில் பரலோகம் செல்வீர்கள் என்று சொல்லப்படுபவர்களில் ஒருவராக எண்ணிக்கொண்டிருக்க இருக்க வாய்ப்பிருக்கிறதா?

வாழ்வில் மிகவும் முக்கியமான இந்த கேள்விக்கான விடையை இன்றைக்கு நீங்கள் அறிந்துகொள்வீர்கள்: நீங்கள் மரிக்கும்போது பரலோகம் செல்வீர்களா?

என்னுடைய விருந்தினர் விற்பனையில் சிறந்த புத்தக ஆசிரியர் டாக்டர் ரேன்டி அல்கார்ன், பரலோகத்தை பற்றிய தலைப்பில் அதிக ஞானமுள்ள கிறிஸ்தவ பண்டிதர்களில் ஒருவர். நீங்கள் மரிக்கும்போது பரலோகம் செல்வீர்கள் என்ற நிச்சயத்தை எப்படி அடைவது என்பதை அவர் உங்களுக்கு தெளிவாக விளக்கிடுவார். இந்த விசேஷித்த ஜான் அன்கர்பர்க் நிகழ்ச்சியை கண்டு மகிழுங்கள்.

---------

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: நிகழ்ச்சிக்கு வரவேற்கிறோம்.நம்முடைய தேசத்தில் பரலோகத்தை பற்றி பேசும் வல்லுநருடன் பேசிக்கொண்டிருக்கிறோம். அவருடைய பெயர் டாக்டர். ரேன்டி அல்கார்ன். இதை உங்களில் பலர் கேட்டுக்கொண்டு வருகிறீர்கள், உங்களில் பலர் நான் பரலோகம் செல்வேன் என்று நம்பிக்கையோடு இருப்பீர்கள் என தெரியும். நான் உங்களுக்கு சொல்லுகிறேன், அப்படி நீங்கள் நினைப்பதற்கு ஏதாவது ஆதாரங்கள் இருக்கிறதா? ரேன்டி சிறப்பான விற்பனையில் இருக்கும் பல புத்தகங்களின் ஆசிரியராயிருக்கிறார்.

சரி, ரேன்டி, நீங்க சொன்னீங்க, உங்களுடைய புத்தகங்களை அநேக மக்கள் வாசித்திருப்பதாக சொன்னீர்கள் அதிலுள்ள அருமையான, சுவாரஸ்யமான, பரவசமூட்டும் விஷயம், நல்ல உணவு, மற்றவர்களோடுள்ள ஐக்கியம், நித்தியநித்தியமாக விளக்கப்போகும் தேவனுடைய அன்பு,

அண்டசராசரங்களின் வெளிப்பாடு, இப்படி எல்லாவற்றையும் பார்த்து, அவர்கள் அங்கே செல்ல இருப்பதாக நினைக்கிறார்கள், ஆனா நீங்க, நீங்க மனந்திறந்து, அவர்களோடு பேசியிருக்கீங்க, சிலர் அந்த எண்ணத்தின்படி போக மாட்டாங்கன்றதையும் சொன்னீங்க, ஏன்னா சிலர் தேவனுடைய அழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை என்றீர்கள். தேவனுடைய அழைப்பு என்றால் என்ன?

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: வசனம் சொல்கிறது ஆட்டுக்குட்டியானரின் ஜீவ புஸ்தகத்தில் பேர் எழுதப்படாதவனாக காணப்படுபவன் பரலோகத்தில் பிரவேசிக்கமாட்டான். அவர்கள் நித்திய நரகத்தில் தள்ளப்படுவார்கள். சரி, உங்களுடைய பெயர் ஆட்டுக்குட்டியின் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட என்ன செய்ய வேண்டும்?

நமக்கு நேராக நீட்டப்பட்டிருக்கும் அழைப்பு என்ன என்பது நமக்கு தெரியும்: ‘‘வா, இலவசமாய் வந்து இந்த தண்ணீரை பானம்பண்ணுங்கள், விலையின்றி நதியின் தண்ணீரை பெற்றுக்கொள்ளுங்கள்.’’

இதுதான் நமக்கு வழங்கப்பட்டுள்ளது. என்னுடைய நண்பர், ரூத்ஏன்னா மெட்ஸ்கர், அவர் ஒருபிரபல பாடகர். அவரும் அவருடைய கணவர் ராயும் ஒரு பிரம்பாண்டமான, திருமண விருந்திற்கு சென்றிருந்தனர். ஆவரை தான் திருமண விருந்தில் பாட கேட்டிருந்தனர், அது அவருக்கு கனம்பொருந்தியதாக இருந்தது.

அது நடந்த இடம் மிகவும் அழகான, சியேட்டல் நகரத்திலேயே மிகவும் உயரமான கட்டிடம் ஒன்றில். இந்த அருமையான பிரம்பாண்ட வரவேற்பு நிகழச்சிக்கு பிறகு, அவர்கள் அழைத்திருந்த ஆர்கஸ்டாரா குழுவினர் வந்து இசை மீட்டனர் அவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர், இந்த அருமையான விருந்தினர்களோடு, சாப்பிடவும் பானம் அருந்தவும் வாய்ப்பை பெற்றனர்.

அவர் ஆர்வமாக இருந்தார். திருமண நிகழ்ச்சிகள் முடிந்தது. இவரும் மேடை ஏறினார். புாடினார். மிக அழகாக பாடினார். அதன்பிறகு அவர்கள் இந்த கொண்டாட்டத்தை அனுபவிக்கப்போகும் அந்த அறைக்குள்ளாக சென்றார்கள்.

ஜனங்களை அங்க பார்க்க முடியம், இசைகலைஞர்கள் அவர்களுடைய சீருடையில் நிற்கிறார்கள், உணவின் வாசனை அருமையாயிருக்கிறது. அந்த வரிசையில் நின்று காத்துக்கொண்டிருப்பதே அருமையாக இருந்தது. அங்கே ஒரு இடுக்கமான வழி ஒன்று இருந்தது. நீங்க கடந்துபோக வேண்டிய ஒரு சிறிய பாதை.

ஒரு பெரிய போடியம் இருந்தது, அதில் ஒரு திறந்த புத்தகம் இருந்தது. அதற்கு அருகில் ஒருவர் நின்றுகொண்டிருந்தார், அவர் எல்லாருடைய பெயரையும் சரிபார்த்துக்கெண்டிருந்தார்.இவர்களுடைய முறை வந்தபோது அங்கு ஏறிச்சென்றார், அவர்கள் மிகவும் பரவசத்தோடிருந்தார்கள். அவர்க்ள அங்கு, நா ரூத்ஏன்னா மெட்ஸ்சர், இவர் என் கணவர் ராய் என்றார்.’’

அவன் அந்த புத்தகத்தில் கூர்ந்துபார்த்து அவர்களிடம் மிஸ், ஸ்பெல்லிங் சொல்லுங்க என்றான்’’ அதற்கு, அவர், M- e-t-z-g-a-r என்றார். ‘‘மன்னிக்கவும், உங்க பெயர் இதில் இல்லை என்றான்.

மேலும் அவர், ‘‘நான், தான் இங்க பாடினேன். அதாவது, திருமணத்தில் பாடினது நான்தான் என்றார்.’’ அதற்கு அவன், ‘‘ சரி, மேம், நீங்க உள்ள போக பாடகராக இருந்தா மட்டும் போதாது என்றான். இதில உங்க பேர் இருக்கனும், இல்லைன்னா உங்கள உள்ள அனுமதிக்க முடியாது. இங்க உங்க பேர் இல்ல. அதனால மன்னிச்சிடுங்க.’’

அங்க வேறொருத்தரை அவன் அழைத்தான், அவங்கள வெளியில கூட்டீட்டு போறதுக்குன்னே அவன் காத்துக்கொண்டிருந்தான், அவர்கள் எலிவேட்டர் மூலமாக கூட்டீட்டு வந்து வானங்கள் நிறுத்தும் இடம் வரைக்கும் கூடவே இருந்தானாம்.

அவர்கள் கீழே வந்தனர், அவர்கள் அதிர்ச்சியடைந்த நிலையில் இருந்ததாக் அவர்களால் பேச முடியவில்லை. காரில் ஏறினார். அவர்கள் தென்புறமாக காரை ஓட்டத் தொடங்கினர், அவங்க, நிச்சயம், போர்ட்லான்ட் பக்கன்னு நினைக்கிறேன். ராய் ரூத்ஏன்னாவ பார்த்து கேட்டார், “ இப்ப என்ன நடந்துச்சு?”

அதற்கு அவர் சொன்னார், “ சரி, நமக்கு அழைப்பு இல்லை, அதில பதிவுசெய்தவர்கள் என்றிருந்தது. ஆனா, “தொடர்ந்து அவ, “ நான் ஒரு பாடகி. நான் பதிவு செய்யனுன்னு எந்த அவசியமில்லையே, என்றாள், சரிதானே?

அதாவது, அதைதான் நானும் நினைத்தேன்.நான் சிறம்பம் பாக்காம நேரம் ஒதுக்கி அவங்கள கூப்பிட்டு, அவங்க அழைப்பிற்கு சரின்னு சொல்லியிருக்கனும்.

அவங்க என்னிடம் சொன்னாங்க, இந்த சம்பவத்தை சொன்னபிறது, அவங்க, எங்கிட்ட, இந்த சம்பவத்தால நான் தெரிஞ்சுக்கிட்ட விஷயம் என்னன்னா இது ஒரு உதாரணமாக மாதிரியாக இருக்கு. ஏன்னா கிறிஸ்துவின் மூலம் தங்களுக்கு கிடைத்த அழைப்பை எத்தனை பேர் ஏற்றுக்கொள்கிறார்கள்?

விலைக்கிரையம் செலுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் ஒன்றும் செய்ய தேவையில்லை. அவர்கள் பாடகர் என்பதை காண்பித்து எதையும் அங்கு சம்பாதிக்கப்போவதில்லை, புரியுதா, எதுவானாலும் சரி, அது ஒருவேளை உங்களோட திறமையோ தாளந்தாகவோ இருக்கலாம். தேவையானது ஒன்று அழைப்பிற்கு சரி என்று சொல்லனும்.”

அவங்க சொன்னாங்க, “ சரின்னு சொல்ல நா நேர எடுத்துக்கவேயில்லை. ரொம்ப வேலையா இருந்தேன். அது அவசியம் என்று எனக்கு தோனல.”

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஆல்ரைட், நேயர்களே, கவனிங்க. தேவனுடைய அழைப்பை எப்படி ஏற்றுக்கொள்வது என்பதைப் பற்றி நீங்க அறிந்துகொள்ள விரும்பினால், தேவன் சொல்கிறபடியே உங்களை நடத்திச் செல்ல விரும்புகிறோம்.

உங்களைக் குறித்து நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியவிஷயங்கள் இருக்கிறது, அவை உண்மை என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும், தேவன் உங்களுக்காக என்ன செய்திருக்கிறார் என்பதையும் அவர் திறந்து வைத்திருக்கும் பரிசு என்ன என்பதையும் புரிந்துகொள்ளுங்கள். எனவே நிதானமாக இந்த காரியங்களை ஒன்றன்பின் ஒன்றாக பார்ப்போம்.

முதலாவதாக நீங்கள் அறிந்திடும்படி தேவன் விரும்பும் காரியம் அந்த கெட்ட செய்தி. அவர் சொல்கிறார், இந்த வசனத்தை பாருங்கள்: எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானோம் என்கிறார்.”

வேதத்தில் இந்த வார்தை வரும் போது, “எல்லாரும்” அதில் நீங்களும் நானும் இருக்கிறோமா, எல்லாருமா, சரி, ரேன்டி, இதைபற்றி சொல்லுங்க?

டாக்டர். ரனேடி அல்காரன்: சரி, தேவனுடைய தரங்களும் நிலைகளும் நம்முடைய கற்பனைக்கும் அப்பார்பட்டது என்று நமக்கு தெரியும் ஏன்ன அவர் எல்லையற்ற தேவன். அவர் எல்லோரிலும் பரிசுத்தர். வசனத்தில் நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது, “ நான் பூரணராயிருப்பது போல நீங்களும் பூரணராயிருங்கள்.” சரி, நாமும் அந்த தரத்திற்கு ஏற்ப வாழ வேண்டும். யாக்கோபில் சொல்லப்பட்டிருக்கிறது நான் ஒரு கட்டளையை தவறினாலும் குற்றவாளிகளாக எண்ணப்படுவோம்.

அப்படியென்றால், “ ஏ, நா நல்லவன் என்று சொல்லமுடியும் நினைக்கிறேன்,” நம்மை பற்றி நாமே அதிகமாக நினைத்துக்கொள்கிறோம். அதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும், சரி, நாம ஒருமுறையாவது அதை மீறியிருப்போம் அதோடு ஒருநாளில் நாம் பலமுறை மீறுகிறோம் என்பதை நாம் விளக்கிக்கொண்டால், யோசித்து பாருங்கள் எத்தனை ஆயிரம் ஆயிரம்

முறைகள் நம் வாழ்வில் நாம் குற்றம் செய்திருப்போம். அதிக குற்றத்தை நாம் செய்திருக்கிறோம்.

பழைய உதாரணம் ஒன்று இருக்கிறது, ஆனா அது ரொம்ப நல்ல விஷயமென நினைக்கிறேன், உதாரணத்திற்கு நாம் மேற்குகடற்கரைக்கு போய் வரிசையாக கரையில நிற்கிறோம் இப்ப நாம் ஹவாய்க்கு நீந்தி போக இருக்கோம்.

இப்ப, நம்மில் சிலர் பத்து அடி நீந்தின உடனே களைப்படைந்திடுவோம். சிலருக்கு எப்படி நீச்சலடிப்பதுன்னே தெரியாது. அவர்களால அவ்வளவு தூரம் போக முடியாது. வேறு சிலர் சில நூறு அடிகள் நீந்திட வாய்ப்புண்டு, மேலும் சிலர் ஒரு மைல் தூரம் செல்ல முடியும், சிலர் இரண்டு மைல்கள் போகலாம்.

நிறைய பேர் அந்த இலக்கை அடைவதில்லை, அது, சுமார் 10 மைல்கள். நீச்சலில் தேர்ச்சி பெற்ற சிலர் அதை செய்து முடித்திடுவார்கள் அதாவது, இந்த ஆங்கில சானல்களின் -- மக்களை போன்றவர்கள், நிச்சயம் நீந்திச் செல்வார்கள். எப்படி அவங்களாக இது முடியும்? எனக்கு தெரியாது.

ஒருத்தரால 40 மைல்க்ள அல்லது 50 மைல்கள் நீந்த முடியுமான்னு எனக்கு தெரியாது. ஆனா ஒன்னை என்னால் சொல்ல முடியும், நிச்சயம் அவங்க ஹவாய்க்கு அருகில் எந்தவிதத்திலும் போய் சேர முடியாது. அதாவது நல்ல தரமான என்ற அடிப்படையில் பார்த்தாலும், நாம் தவறிட வாய்ப்புண்டு, நாம் எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையை இழந்தவர்களாக இருக்கிறோம்.

நாமே தனியாக அதை சரிசெய்ய முடியாது. நாம் தேவன் எதிர்பார்க்கும் பரிசுத்தத்தை தனியாக ஈடுசெய்ய முடியாது. நம்மை நாம் சார்ந்திட கூடாது, நாம் நம்பிக்கையின்றி இருக்கிறோம்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: நீங்கள் அறிந்துகொள்ளும்படி தேவன் விரும்பும் அடுத்த விஷயம், “ பாவத்தின் சம்பளம் மரணம்.” நாம் செய்த பாவங்களுக்கு நாம் விலைகிரையம் செலுத்த வேண்டும், அது மரணம் என்று சொல்லப்படுகிறது. தேவனிடத்திலிருந்து பிரிக்கப்படுதல்.

ஆனால் அதில் தொடர்ந்து, “தேவனுடைய கிருபை வரமோ நித்திய ஜீவன் என்கிறது.” மேலும் அது, “ கர்த்தராகிற இயேசு கிறிஸ்துவின் மூலம் உண்டாகிறது.” இதைப் பற்றி நீங்க சொல்லுங்க, இதனுடைய அர்த்தம் என்ன, “ பாவத்தின் சம்பளம்” நித்தியமாக தேவனிடமிருந்து பிரிந்து இருப்பதென்றால் என்ன, நாம் இந்த அழகான பரலோகத்தில் அவரோடு தானே இருக்க வேண்டும்.

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: மரணமும் இருக்கிறது ஜீவனும் இருக்கிறது. மரணம் ஜீவனுக்கு எதிர்மறையானது. ஜீவன் என்பது நித்தியத்திற்கும் அப்பார்பட்ட ஒன்றாகும். வசனங்களில் நாம் அனைவரும் நித்தியநித்தியமாக இருப்போம் என்று கூறப்பட்டுள்ளது.

சிலர் எழுந்திருப்பார்கள். யோவான் 5 ஜீவனுக்கென்று எழுந்திருப்பதையும், அழிவிற்கென்று எழுந்திருப்பதையும் பற்றி சொல்கிறது. ஒன்று நித்திய ஜீவன், அடுத்தது நித்திய மரணம். மரணம் என்பது என்றென்றைக்குமாய் இருக்கிறது, அதைப் போல் ஜீவனும் என்றென்றைக்குமாய் இருக்கிறது.

நாம் பாத்திரவான இருப்பதை பெற்றுக்கொள்வோம், அப்படியானால் அது நித்திய மரணம். நாம் இயேசு கிறிஸ்துவின் பக்கம் திரும்பி, அவர் நமக்காக செய்திருப்பதை நம்பினால், “தேவனுடைய கிருபைவரமோ இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்.”

இதுதான் நாம் நித்திய நித்தியமாய் சந்தோஷத்தோடும் ஆனந்தகளிப்போடும் நாம் நேசிக்கும் தேவனோடு இருந்து அவரை ஆராதித்து இந்த உலகில் நாம் நேசித்தவர்களோடு இருப்பதற்கான ஒரே வழி. இது இப்படிதான் நடக்க வேண்டும் -- இயேசு கிறிஸ்துவின் மூலம்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: பிரியமானவர்களே, இது கவனிக்கவேண்டிய ஒன்று. இப்போது துரிதமாக ஒரு இடைவேளை நாம் திரும்பி வந்ததும் இந்த ஈவைக் குறித்து நாம் பேச இருக்கிறோம். இதுதான் நற்செய்தி மேலும் இது இலவசமாக கிடைத்த ஈவல்ல. நமக்கு இலவசமானது, ஆனால் தேவன் அதற்கு விலை செலுத்தினார்.

தேவனுடைய ஈவை நாம் பெற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை பற்றி சொல்லப்போவதை நீங்கள் கவனிக்க விரும்புகிறேன். இணைந்திருங்கள். மீண்டும் சந்திப்போம்.

-------------------

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஆல்ரைட், மீண்டும் வருக. நாம் டாக்டர். ரேன்டி அல்கார்னுடன் பரலோகத்தை பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். மக்கள் எதிர்கொள்ளும் ஆபத்தான சூழ்நிலை என்னன்னா அவங்க பரலோகத்தை பற்றியும் அங்கு போகும்படி காத்திருக்கும் கனவுகளோடு இருக்கிறார்கள், அதுதான் அவர்கள் இடம் என்று நினைக்கிறார்கள், ஏன்னா அவங்க நல்ல காரியங்களை செய்திருப்பதால், அது அவர்களை பரலோகம் கொண்டு செல்லும் என்கின்றனர்.

ஓகே, வேதம் சொல்கிறது இந்த செய்தி நேரடியாக சாத்தானிடம் இருந்தே வருகிறது. அது பாதாளத்திலிருந்து வருகிறது, சரியா. அது ஏன் என்பதை நாம் பார்க்க இருக்கிறோம். நாம் பாவிகள் என்று தேவன் சொல்கிறார். நம்முடைய பாவத்திற்கு நாம் விலை கொடுக்கவேண்டும், அதுதான் தேவனிடத்திலிருந்து பிரிந்து நகரம் செல்வது.

ஆனால் அங்கு தேவனுடைய ஈவைப் பற்றி சொல்லப்படுகிறது, அதன் மூலமாக தான் நாம் பூஜியத்திலிருந்து அடுத்து நிலையை அடைவோம். வேதம் என்னசொல்கிறதென் பாருங்கள், “ நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.” ரோமர் 5:8

மேலும் அதில், “ தேவன் இந்த உலகத்தில் அன்புகூர்ந்தபடியால்” அது நீங்களும் நானும் தான், “ மத்துடைய ஒரே பேரான குமாரனை கொடுத்தார்… அவரை விசுவாசிக்கிறவர்கள் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு செய்தார்.” ரேன்டி, இலவசமான இந்த ஈவை நாம் பெறும்படி தேவன் விலை செலுத்த வேண்டியிருந்தது. அதை விளக்கிடுங்கள்.

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: சரி, தேவன் நமக்காக செய்திருக்கும் காரியத்தைவிட அவரிடத்தில் பெரிதாக என்ன கேட்ட முடியும்? பரிபூரண பரிசுத்தத்தை அடைந்தவர்களாய் அவரை திருப்திபடுத்திட, நாம் பரிபூரண பரிசுத்தமான வாழ்க்கை வாழ தியாகம் செய்யவேண்டும், கரைதிரையற்றவர்களாக இருக்க வேண்டும்.

தேவ மனிதனாகிய இயேசுகிறிஸ்துவை தவிற யாரால் அதை செய்ய முடியும்? அது புத்திக்கு எட்டாத ஒன்று.  ஒரு தூதனால் அதன் விலையை செலுத்த முடியவில்லை, ஏனென்றால் தூதன் காலங்களுக்குள் கட்டுப்பட்டவன். மனுக்குலத்தினால் அதற்கு விலை செலுத்த முடியவில்லை, ஏனெனில் காலங்களுக்குட்பட்டதோடு, விழுந்துபோயிருந்தான்.

இயேசு கிறிஸ்து மாத்திரமே – ஆமாம், மனிதனாய் வந்தவர், ஆனால் தேவ குமாரன், தேவனுடைய அவதரிப்பு – விலை செலுத்த முடிந்தது, அதை அவர் செய்தார். அந்த ஈவை அவர் நமக்கு கொடுத்திருக்கிறார்.

மேலும், நமக்கு நேராக நீட்டப்பட்டிருக்கும் அந்த ஈவை பார்த்து ஒருவேளை நாம், “நான், இந்த பரிவை பெற தகுதியற்றவன். தேவனுடைய கிருபையை பெற தகுதியற்றவன் என்றிடலாம்.

ரைட், உண்மைதான். அதாவது, அதற்கு நீங்க தகுதியானவரா இருந்தா, அது தேவையில்லையே. விஷயம் இதுதான், உங்களுக்கு தகுதியில்லை, ஆனா அவர் அதை தருகிறார், அதனால் உங்க பெருமையை தள்ளிவிட்டு அந்த ஈவை பெற்றுக்கொள்வீர்களா? ஏன் பெற்றுக்கொள்ள கூடாது?

அதாவது, நீங்க ஒரு தேசத்தில பிணைகைதியாக இருக்கீங்க அப்ப உங்கள காப்பாத்த ஒரு படை எலிகாப்டர்ல வந்து உங்கள வெளியில் இழுத்து உங்களப் பார்த்து, ஓகே, நீங்க என்ன செய்யனுன்னா, மேல வந்து உங்க கை நீட்டி பிடிங்கன்னு சொல்றாங்க.''

அவங்க உங்கள தூக்க கை நீட்ட, அப்ப நீங்க, ''இவங்கள, நம்பலாமான்னு எனக்கு தெரியல இது எனக்கு பாதுகாப்பானதான்னு நினைப்பீங்களா.'' உங்களுடைய முடிவு என்ன? நீங்க இருக்கிற இடத்திலேயே இருக்க நினைப்பீங்களா? அதாவது, உங்க தீர்மானம் என்னவாயிருக்கும்? அமெரிக்க படையைவிட நாம் அதிகமாய் நம்பத்தக்க நபர் தேவன்.

ஒன்றை கவனிக்கவேண்டும், உங்களுடைய நிலையை பற்றி நீங்கள் அறிந்திருந்தால் நிச்சயம் நீங்க உங்க கரங்களை நீட்டி அந்த ஈவை பெற்றுக்கொள்வீர்கள். சரி, நீங்க தகுதியானவர் என்பதால் உங்களுக்கு வழங்கப்படுகிறதா? இல்லை. அவங்க வாழ்க்கைய பணயம் வைக்கிறாங்க. உங்களைப் போலவே அவர்களுடைய வாழ்வும் விலையேறப்பெற்றது, ஆனா அந்த ஈவை வழங்கும்படியாக அவர்கள் வருகிறார்கள்.

உங்களுடைய இஷ்டம்தான். உங்களுடைய கரங்களை நீட்டி எடுத்துக்கொள்வீர்களா? மேலும் உங்களுக்கு தெரியுமா? தேவனுடைய ஆவியின் இடைபடுதலை தவிற வேறெந்த வல்லமையும் அதற்கு மேற்பட்டது கிடையாது.

அதை நம்புகிறதற்கு நமக்கு சக்தி கிடையாது, ஆனால் விசுவாசிக்கும்படி தேவன் கூறுகிறார், அதை பெற்றுக்கொள்ள ஊக்குவிக்கிறார், கிருபையாக அதை நாம் செயல்படுத்த அனுமதிக்கிறார். நமக்கு இதில் எந்த பெருமையும் கிடையாது. அவரே பெருமைக்குரியவர், நமக்காக செய்ய வேண்டிய அனைத்தையும் தேவன் செய்து முடித்திருக்கிறார்.

இப்ப நாம தான் நம்முடைய கரங்களை நீட்டி பெற்றுக்கொள்ள வேண்டும். ''நீர் கொடுக்கும் ஈவை நான் பெற்றுக்கொள்கிறேன்.''

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: சரி, நேயர்களே, இப்போதும் உங்களில் சிலர், இதை யோசித்துக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் பாவி என்பதை உணர்ந்திருக்கலாம். ரேன்டி கூறிய தேவ்ன அருளும் இநத ஈவைபற்றி நீங்கள் புரிந்துகொண்டிருக்கலாம். தேவன் உங்களோடு பேசிக்கொண்டிருக்கிறார், அப்படியில்லாவிட்டால் நீங்கள் உணர்ந்திருக்க மாட்டீர்கள். எனவே நீங்கள் அடுத்த செய்ய வேண்டும் காரியம் இதுதான்.

வேதம் ஒரு விஷயத்தை சலைக்காமல், திரும்ப திரும்ப எடுத்துரைக்கிறது, ''கிரியைகளினால் அல்ல விசுவாசத்தினாலே உண்டானது.'' ஓகே. விசுவாசம், கிறிஸ்துவில் விசுவாசமுள்ளவர்களாய் இருக்கவேண்டும். கிறிஸ்துவை நாம் விசுவாசிக்கவேண்டும். கிறிஸ்துவில் நம்பிக்கையாயிருக்கவேண்டும். இந்த உலகத்தில் விசுவாசம் என்பது எதை குறிக்கிறது, எனக்குள் அது இருக்கிறது என்பதை நான் எப்படி அறிந்துகொள்ள முடியும்?

டாக்டர். ரனேடி அல்கார்ன்: நம்பிக்கை என்பது நமக்கு உண்மையான ஒன்றாக தோன்றுவது என நினைக்கிறேன். சில ஜனங்கள் அப்படிதான் நம்புகிறார்கள். நாம் விசுவாசிக்கும்படியான சில வாக்குத்தத்தங்களும் நமக்கு இதைதான் வலியுறுத்துகிறது. உங்களை மீட்கும் அந்த மீட்புபடையை நீங்கள் நம்பி, அனுகவேண்டும்.

உண்மையில் நீங்கள், உட்காரும்பொழுது, உங்களுடைய எடையை தாங்க அந்த நாற்காலி பலமானது என நம்பி உட்கார வேண்டும். நீங்க இந்த வேலையை செய்தா இவ்வளவு சம்பளம் கிடைக்கும் என்று எஜமான் சொன்னதை நம்பிதா நீங்க வேலையை செய்கிறீர்கள். அதனால், நம்பிக்கை என்பது நமக்கு புதிதானது கிடையாது.

ஆனால் நாம் புரிந்துகொள்ள வேண்டிய விஷயம் இதுதான், இந்த பூமியில் சில சமயங்களில் தவறியிருக்கலாம், தவறானவற்றை விசுவாசித்திருக்கலாம் சில வேளைகளில் மக்கள் வாக்குதவறியதால் நாம் காயப்பட்டிருக்கலாம், ஆனால் தேவன் வாக்குரைத்தை நிச்சயம் செய்திடுவார்.

தேவனுக்கு எல்லாம் தெரியும். தேவன் உண்மையுள்ளவராக இருந்து நம்மிடம் சொல்கிறார், ''பார், நீ தவறான இடத்தில் இருக்கிறாய். இந்த தீமையான இடத்திலிருந்து உன்னை மீட்க என் மகனை அனுப்புகிறேன், என்னை நம்பும்படியாக உனக்கு அழைப்பு கொடுக்கிறேன் என்கிறார்.''

நாம் தேவனை பார்த்து சொல்கிறோம், அவர் என் நம்பிக்கைக்கு பாத்திரரா? நீங்க எங்கிட்ட விளையாடுறீங்களா? சிருஷ்டிகர்? மீட்பர்? நம்மால் அவரை பார்த்து எப்போதாது சொல்லமுடியுமா, ''நீங்க என்ன போதுமான அளவு நேசிப்பதாக எனக்கு தோனல?''

இயேசு தம்முடைய கரங்களை நீட்டி, '' இந்த கரங்களில் இருக்கும் தழும்புகளை பார். உன்னை பற்றி அக்கரையற்ற தேவனுடைய கரங்களைப்போல இவை காணப்படுகிறதா என்கிறார்'' நம் நம்பிக்கைக்கு பாத்திரர்!

நான் வாலிப பருவத்தில் கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டேன். நான் கிறிஸ்தவரல்லாத குடும்பத்தில் வளர்ந்தேன், சுவிசேஷத்தை ஒருபோதும் கேட்டதில்லை.

சுவிசேஷத்தை நான் கேள்விபட்டேன். வசனங்களை வாசிக்க ஆரம்பித்தேன். நான் புதிய ஏற்ப்பாட்டின் பகுதிகளை வாசித்தேன், அங்கே கிறிஸ்து என்னும் நபரை சந்தித்தேன். நான் வாசித்த போது, அவரிடத்தில் சத்தியம் இருந்தது.

நான், ''நான் விசுவாசிக்கிறவர் இவர்தான், என் நம்பிக்கை.'' ஏன்றதோடு அப்போதுதான் நான் முழங்காற்படியிட்டு இறுதியாக, என் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, நான் சொன்னேன், '' என் வாழ்வை உம்மிடம் தருகிறேன்.'' அதற்காக இந்நாள் வரையும் நான் வருத்தப்படவில்லை.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஆமா, பூஜியத்திலிருந்து ஒரு படி முன்னோக்கி செல்தல். அநேகருக்கு கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கை விசுவாசத்தை பற்றிய தெளிவு இருக்கிறது, இது பெரும்பாலும் அவங்க காப்பீட்டில் முதலீடு செய்வது போன்றது. ''ஓகே, அதை செய்துட்டேன், ஆனா இதையும் நா செய்யப்போறேன், அதற்கான சில வேலைகளையும் நா செய்யப்போறேன். நா சபைக்கு போகப்போறேன். நான் ஜெபிக்கப்போகிறேன். நான் என்னுடைய வேதத்தை வாசித்திடுவேன். நான் நற்கிரியைகளை செய்திடுவேன், ஏழைக்கு இரங்கிடுவேன்.''

அவங்க இப்படி பல விஷயங்களை செய்ய நினைக்கிறாங்க அதனால் அவங்க பரலோகம் போகும்போது இதில் ஏதாவது ஒன்று துணை நிற்பதாக நினைக்கிறாங்க, ஓகே. தேவன் சொல்வது இவைகளை பற்றி அல்ல. ஏன்னா அவர் கள்ளனைப் பார்த்து சொன்னார், இயேசு சிலுவையிலிருந்த கள்ளனை பார்த்து, எதையும் செய்யாதவனை பார்த்து, ''இன்றைக்கு நீ என்னோடே கூட பரதீசிலிருப்பாய் என்றார்.'' சரி, இதற்கு அடித்தளம் என்ன, எந்த கிரியைகளும் செய்யாமல் கிறிஸ்துவை மட்டும் விசுவாசிப்பது என ஏன் சொல்கிறோம்?

டாக்டர். ரனேடி அல்கார்ன்: ரைட். சரி, இயேசு மற்றும் கிரியை என்றால், கிரியை என்பது நம்மை சார்ந்ததாக இருந்திடுமே. இதை பெற்றுக்கொள்ள நாம் எவ்வளவு கடினமாக உழைக்கிறோம் என்றாகிடும். இதற்காக நாம் கொடுத்திருக்கிறோம் இதை பெற்றுக்கொள்ள நாம் தன்னார்வத்தோடு வந்து, நல்ல விஷயங்களை செய்கிறோம் என்றாகிடும்.

இயேசுவை சேர்த்து. தேவன் இல்லை என்கிறார், சேர்த்து என்பதை மறந்திடுங்கள். இயேசு மாத்திரமே. ஏனென்றால் இயேசுவோடு சேர்த்து மற்றகாரியங்களை இணைத்தால் அதற்கான கனத்தை நாம் பெற்றிடுவோம், ஏனென்றால் அப்படிபட்ட காரியங்களை செய்ய ஞானமுள்ளவர்களாக நாம் முன்வந்திடுவோம்.

மேலும், ''கிருபையினாலே விசுவாசத்தை கொண்டு நீங்கள் இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவனும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியையினால் உண்டானதல்ல.'' நாம் பெருமைபடுவோம். பெருமைக்காக செயல்பட நினைப்போம், எதையாகிலும் செய்தால் அப்படி செய்வோம்.

மாறாக கிறிஸ்துவின் மூலம் தேவன் செய்த கிரியைகளுக்காக நாம் அவரை துதிப்பது மட்டும் போதுமானது.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: வேதம் கூறுகிறது கிறிஸ்துவின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தினாலே நித்திய இரட்சிப்பை பெற்றீர்கள் என்று. ஆனால் வேதம் நீங்கள் மனந்திரும்ப வேண்டும் என்றும் சொல்கிறது. எனவே மனந்திரும்புதலை எப்படி விளக்கிடுவீர்கள், நான் அதை செய்திருப்பதை அறிந்துகொள்வது எப்படி?

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: மனந்திரும்புதல் என்றால் மனம் மாறுதல் நோக்கங்களை மாற்றிக்கொள்ளுதல். நீங்கள் செய்த காரியத்திற்காக மனம் வருந்துவது, மேலும் மறுபடியும் அந்த செயலை செய்யாமல் இருப்பதற்கு தேவனுடைய உதவியை நாடி நிற்பதற்கு இச்செயல் ஒரு அடையாளமாக இருக்கிறது.

மேலும் இதில் நம்பிக்கையும் அடங்கியிருக்கிறது நீங்கள் தீய காரியங்களை செய்து மனந்திரும்பி மறுபடியும் அவரிடத்தில் மன்னிப்பு கேட்டால், அவர் மன்னிப்பார் என்ற நம்பிக்கை. ஆனால் கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசம் என்று சொல்லும்போது, மனந்திரும்புதல் என்பது உங்கள் மனதில் நினைவுவரும் பாவங்களை நீங்கள், அறிக்கை செய்வதாகும்.

மேலும், மற்ற பாவங்களை தேவன் உங்களுக்கு நினைப்பூட்டுவார், ஆனால் அடிப்படையாக நீங்கள், “நீர் எனக்கு வேண்டும். இதை என்னால் செய்யமுடியாது. நீரின்று நம்பிக்கையற்றிருக்கிறேன் என்றிடுங்கள்.”

மேலும் என்னுடைய கருத்து இதுதான் உங்களுடைய நம்பிக்கையற்ற நிலையில் கிறிஸ்துவின் மூலம் செயல்பட்ட தேவன் மட்டுமே உங்களுக்கு உதவிடுவார், இதை நீங்கள் புரிந்துகொண்டால் எல்லாம் உங்களுக்கு சுலபமாக இருக்கும்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ரேன்டி, இப்போதும் நீங்கள் ஒரு ஜெபத்தை ஏறெடுக்க விரும்புகிறேன், ஏன்னா என்னுடைய எண்ணம் நம் நேயர்களில் பலரும், இங்குள்ளவர்களும் உலகெங்குமுள்ளவர்களும், ஒருவேளை இப்போது, “எனக்கு தேவனுடைய ஈவு வேண்டும். அவருடைய அழைப்பை நான் நிராகரித்திட மாட்டேன், நா பரலோகம் போகவேண்டும் என்றிடலாம்.”

தேவன் என்னை பார்த்து, “இதை நீ செய்ய நான் உன்னை நேசித்து தேவையான அனைத்தையும் செய்திருக்கிறேன் நீ வா, என்பதால் நான் மறுக்க மாட்டேன் என்றிடலாம்.” ஆனா அவங்களுக்கு ஜெபிக்க தெரியாமலிருக்கலாம். ஆதனால சொல்கிறேன், அவர்களை ஜெபத்தில் நடத்துங்கள் அவர்கள் உங்களை பின்பற்றுவார்கள், அதனால் உங்களோடு சேர்ந்து ஜெபிக்கும்போது அவர்கள் கர்த்தராகிய இயேசுவை தங்கள் வாழ்வில் ஏற்றுக்கொள்ள முடியுமல்லவா?

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, நீர் மெய்யானவர் என்பதை நான் விசுவாசிக்கிறேன். நீர் சிலுவைக்கு சென்று அங்கு என்னுடைய பாவங்களுக்கு விலை செலுத்தும்படி வாதிக்கப்பட்டீர் என்பதை விசுவாசிக்கிறேன்.

நான் ஒரு பாவி என்பதை நம்புகிறேன். நான் நித்திய மரணத்திற்கு பாத்திரவான். இருப்பினும் நீர் நித்திய ஜீவனை அறளிப்பதாக சொல்லியிருப்பதை நான் விசுவாசிக்கிறேன்.

மேலும், தேவனே, என்னிலுள்ள அவிசுவாசத்திலிருந்து விடுபட எனக்கு உதவும். நான் சொல்லும் இந்த வார்த்தைகளை நான் உணர்ந்து சொல்கிறேன் என்ற உணர்வை என் இருதயத்தில் தாரும். இயேசு கிறிஸ்துவில் நீர் எனக்கு அருளின ஈவை பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய சார்பில் இயேசு கிறிஸ்து செய்த காரியத்தை பெற்றுக்கொள்ள என்னால் எந்த கிரியையும் செயலையும் செய்ய முடியாத என்பதை ஏற்றுக்கொள்கிறேன். அவரால் மாத்திரமே கூடும். இயேசுவே வழி என்பதையும், சத்தியம் , ஜீவன் என்பதை ஏற்கிறேன், பிதாவினிடத்தில் சேர வழி அவரே என நம்புகிறேன்.

தேவனே, நீர் எனக்கு அருளிடும் ஈவை நான் பெற்றுக்கொள்கிறேன், நீர் என்னுடைய வாழ்வில் வரும்படியாக ஜெபிக்கிறேன், நீர் என் இருதயத்தில் வாசம் செய்ய விரும்புகிறேன், அதனால் உமக்கு கனத்தையும் மகிமையையும் செலுத்தும்படியான மாற்றமடைந்த வாழ்க்கை வாழ எனக்கு உதவிடும்.

உம்முடைய பிரசன்னத்தில் உம்மோடு நித்திய வாழ்வை நான் அனுபவிக்க முடியும் என்று நீர் கூறியிருப்பதை நான் நம்புகிறேன், அது என்னுடைய கிரியையினால் உண்டானதல்ல, என் சார்பில் நீர் செய்த கிரியையினால் உண்டானதாகும். இயேசுவின் நாமத்தில் கேட்கிறேன், ஆமென்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: சரி, நேயர்களே, நீங்க இந்த ஜெபத்தை செய்திருந்தால், ரேன்டி, அவர்கள் பரலோகத்திற்கு செல்வோம் என்ற நிச்சயத்தை பெற தேவன் விரும்பிடுவாரா?

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: ஆமாம், நிச்சயமாக விரும்புகிறார். "நீங்கள் நித்திய ஜீவனுக்கு உண்டானவர்கள் என்பதை அறிந்துகொள்ளும்படியாக இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்." ஆனா நிச்சயமாக தேவன் உங்கள் வாழ்வில் இடைபட்டு நீங்கள் கனிகொடுக்கும்படி உதவுவதோடு எல்லா விதத்திலும் விசுவாசத்தில் வளர்ந்து உங்கள் இரட்சிப்பின் நிச்சயத்தை பெற செய்வார்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ரேன்டி, நா உங்களை பாராட்டுவதற்கு என்னிடம் வார்த்தைக்ள இல்லை நீங்க இந்த நிகழ்ச்சிக்காக ஓரிகானிலிருந்து இங்க சாட்டநுகா வந்ததை நான் பாராட்டுகிறேன். அதோடு நீங்க பகிர்ந்துகொண்ட எல்லா விஷயங்கள், இந்த அருமையான புத்தகங்களில் இருக்கிறது, நேயர்களே, இதை நான் பரிந்துரைக்கிறேன்.

இந்த செய்திகளை எங்களோடு பகிர்ந்துகொள்ள தீர்மானித்ததற்காக உங்களுக்கு நன்றி.

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: இது என்னுடைய சிலாக்கியம் ஜான். இங்கு வந்ததில் எனக்கு மகிழ்ச்சி.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: நேயர்களே, அடுத்த வாரம் நிகழ்ச்சியை காண தவறமாட்டீர்கள் என நம்புகிறேன்.

எங்களுடைய மற்ற டிவி நிகழ்சிகளை பார்க்க எங்களுடைய ஜான் அன்கேர்பெர்க் ஷோ ஆப்பை இலவசமாக பதிவிறக்கம் செய்திடுங்கள்.

"இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கான ஜெபம்" JA show.org